ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/10 - 2020 ජූලි මස 28 වැනි අඟහරුවාදා - 2020.07.28

2186/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/LND/ACQV1/D3/25.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/SW/416.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரநாயக பிரதேச செயலாளர் பிரிவில், கன்ஹதபலாத சிறு பிரிவின், இலக்கம் 47 சி, மோராகம்மன கிராம உத்தியோகத்தர் பிரிவின், மோராகம்மன கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.02.27 ஆந் திகதியுடைய ஆ. கி. கே 3769 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் ஏறத்தாள 0.0212 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய பல்கும்குபுர காணியின் எல்லைகள் :

**01. துண்டு இல. 01; காணியின் பெயர்: பல்கும்புர; விபரம்: காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவர் சிறிவர்தன கெதர அனுர சிறிவர்தன எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக; விஸ்தீரணம்: 0.0212 ஹெக்டயார்**

வடக்கு: பாதை (பாதை அபிவிருத்தி அதிகார சபை) பல்கும்புர; கிழக்கு: பல்கும்புர; தெற்கு: பல்கும்புர மற்றும் அருவி; மேற்கு: அருவி மற்றும் பாதை (பாதை அபிவிருத்தி அதிகார சபை).

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மு. ப. 10.00 மணிக்கு அரநாயக பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரநாயக்க.

பிரதேச செயலகம்,
அரநாயக்க,
2020, யூலை 23.

08 - 152

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான பத்திரிகை அறிவித்தல்

பத்தேகம பிரதேச செயலாளரின் குறிப்பு
இல.: BDD/LND/02/79/4162/282.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்:
4-3/6/2012/HW/317.

மேலே உள்ள தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை (அதி விஷேட) இலக்கம் 1986/4 கொண்ட 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய காணி எடுத்தல் தொடர்பான விளம்பரத்தின் கீழ் பத்தேகம பிரதேச செயலாளரின் மூலம் காணியினை எடுத்துக் கொள்வதற்கான அனைத்து விதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ள காணி தொடர்பான விபரங் களின் கீழ், காலி மாவட்ட பத்தேகம பிரதேச செயலகப் பிரிவின் வல்பிட்ட எனும் கிராமத்தில் அமையப் பெற்றுள்ள நில அளவையாளர் நாயகத் தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் கா 4162 கொண்ட அடிப்படை காணித்துண்டின் துண்டு இலக்கம் 282 எனக் குறிப்பிடப்பட்டு உள்ள அளவில் 0.0079 ஹெக்டயார் கொண்ட கீழ் உள்ள பிரகாரம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என இத்தால் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## திருத்தம்

காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலகப் பிரிவின் வல்பிட்ட எனும் கிராமத்தில் அமையப் பெற்றுள்ள நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலக்கம் கா 4162 கொண்ட அடிப்படைக் காணித்துண்டு:

01. துண்டு இல. 282
காணியின் பெயர்: கொடபரகஹ லியத்த; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0102 ஹெக்டயார்.

சட்டத்தரணி சீ. பீ. கே. ஜானக குருசிங்க,
பிரதேச செயலாளர்,
பத்தேகம.

பிரதேச செயலகம்,
பத்தேகம,
2020, யூலை 08.

08 - 189